**4.2.2012 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா ஆற்றிய உரை**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நேற்று வரை நடைபெற்ற விவாதத்திற்கு எனது பதிலை அளிக்க விழைகிறேன்.

ஆளுநர் உரையின் மீதான இந்த விவாதத்தில் 37 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப் பெற்றது சட்டமன்றம். மக்களின் ஆசைகள் மற்றும் விருப்பங்களை சட்டமன்றத்தில் எடுத்துக் கூறுபவர்களாக இருப்பவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள். மக்களின் தேவைகள் என்ன? நாட்டின் தேவைகள் என்ன? நாட்டின் வளர்ச்சி என்பது எவ்வாறு அமையப்பெற வேண்டும்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இவைகளையெல்லாம் எவ்வாறு நிறைவேற்றி வருகிறது? என்பதை எல்லாம் ஆட்சியாளர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது தான் சட்டமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலான உறுப்பினர்கள், அரசின் திட்டங்களை சாதனைகளை பாராட்டி, வரவேற்று பேசி இருக்கிறார்கள். சிலர் அரசுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்கள். சிலர் இதை குறை கூறுவதற்கு ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு பேசி இருக்கிறார்கள். சில பெரிய மனிதர்களுக்கு அவைக்கு வந்து பேசும் வாய்ப்பு இருந்தும், அதை பயன்படுத்திக் கொள்ளாமல், அவைக்கு வெளியிலே இருந்து, ஆளுநர் உரையில் தெரிவித்த கருத்துகளுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில், சில விமர்சனங்களை செய்து இருக்கிறார்கள். சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, இடித்துரைத்து, முரட்டுச் சொற்களைப் பயன்படுத்தி பேசி இருக்கிறார்கள்.

"இனிய சொற்கள் இருக்கக் கடுமையான சொற்களைப் பயன்படுத்துவது பழம் இருக்க காயை உண்பது போல்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்ப, வாதங்களை எடுத்து வைத்திருக்கலாம். கருத்துக்கு கருத்து, வாதத்திற்கு வாதம், புள்ளி விவரத்திற்கு புள்ளி விவரம், சொல்லுக்கு சொல், என்ற அடிப்படையில் அவர்கள் உரையாற்றி இருப்பார்களேயானால் உள்ளபடியே அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். அப்படிச் செய்யாமல், உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், சில உறுப்பினர்கள் பேசி இருப்பது உண்மையிலேயே வேதனை அளிக்கும் செயல் என்பதை மட்டும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் கடமைகளை திறம்பட நிறைவேற்றுபவர்கள் யார்? மக்களின் எண்ணங்களை வடிவமைக்கக்கூடிய அரசு எது? மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய ஆட்சி எது? என்பதை எல்லாம் ஆராய்ந்து அதன் அடிப்படையில் ஒரு கட்சியை மக்கள் ஆட்சி செய்ய தேர்ந்தெடுக்கின்றனர். எனவே தான், மக்கள் யார் தமக்கு நன்மை செய்வார்கள் என்று எண்ணுகிறார்களோ, அவர்களையே மக்கள் மன்றத்திலும், ஆட்சி மன்றத்திலும் சேவை செய்ய பணிக்கின்றனர். சட்டமன்றத்தின் பின்னாலும், ஜனநாயகத்தின் பின்னாலும், இருப்பவர்கள் மக்கள் தான். வாக்குச் சாவடியில் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு முன்னர் பல முறை சிந்தித்து, அந்த சிந்தனையின் பயனாகத் தான் வாக்களிக்கின்றனர்.

நான் இந்த சட்டமன்றத்திலே கடந்த ஆண்டு தெரிவித்ததைப் போல, முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் மக்கள் பட்ட வேதனைகள் சொல்லி மாளாது. சட்டம் ஒழுங்கு சீரழிவு, விண்ணை முட்டும் விலைவாசி, மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, கள்ள

லாட்டரிச் சீட்டு விற்பனை, என்று எண்ணற்ற கொள்ளைகள்; ரேஷன் பொருட்கள் கடத்தல்; நில அபகரிப்பு என பல்வேறு பிரச்சனைகள் மக்களை வாட்டின. பல்வேறு துறைகளும் ஒரு குடும்பத்தின் பிடியிலே சிக்கித் தவித்து, எவரும் சுதந்திரமாக எந்த ஒரு தொழிலையும் செய்ய இயலாத நிலை இருந்தது.

இவற்றையெல்லாம் சிந்தித்து, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, தனி நபர் வருவாய் பெருக்கத்திற்கு; இல்லாதோர் எவரும் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலை ஏற்படுவதற்கு, தமிழக மக்கள் எனது தலைமையை நம்பி வாக்களித்தார்கள். அவ்வாறு மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் வகையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும்; பொருளாதார வளர்ச்சி திட்டங்களையும்; உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டங்களையும்; தனி நபர் வருவாய் பெருக்க திட்டங்களையும்; சமூக மூலதனத்தைப் பெருக்கும் திட்டங்களையும்; மனித வள மேம்பாட்டுத் திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழக மக்கள் இவ்வாறு ஏற்றம் பெறுவதைப் பொறுக்க முடியாமல், தங்களுக்கு வாக்களிக்காத மக்களை சிலர் நித்தமும் நிந்தித்தே வருகிறார்கள். வாக்களித்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவ்வாறு தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு ஆற்றக்கூடிய முதற்கடமை சட்டமன்றக் கூட்டங்களிலே கலந்து கொண்டு விவாதங்களில் பங்கேற்று; ஆட்சியாளர்களின் கருத்துகளுக்கு மாற்றுக் கருத்துகள் இருப்பின், அந்த மாற்றுக் கருத்துகளை எடுத்துக்கூறி; மக்களுக்கான திட்டங்களை இன்னும் செம்மையாக செயல்படுத்துவது எப்படி என்பதை எடுத்துக் கூறுவதே ஆகும். ஆனால் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டும் கூட்ட நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாத ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர் "இன்றைக்கு கிடைத்திருக்கின்ற தோல்வி எங்களுக்கல்ல — உங்களுக்கு! நீங்கள் தேடிக் கொண்ட தோல்வி! நீங்களே வரவழைத்துக்கொண்ட தோல்வி! தோற்றது கழகமல்ல — தோற்றது வாக்காளர்களாகிய நீங்கள்" என்று தமிழக மக்களையும், தமிழக வாக்காளர்களையும், இந்த சட்டமன்றத்தையும் கொச்சைப்படுத்தி பேசியுள்ளார். இது ஜனநாயக அமைப்பையே, இந்திய அரசமைப்புச் சட்டத்தையே கொச்சைப்படுத்தும் பேச்சாகும். "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'' என்ற பேரறிஞர் அண்ணாவின் பிறந்த ஊரான காஞ்சிபுரத்திலே, மக்களைக் கொச்சைப்படுத்தி இவ்வாறு பேசியுள்ளது அண்ணாவின் மீது எத்தகைய மரியாதையை இவர் வைத்துள்ளார் என்பதையே காண்பிக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு வருகிற வழியெல்லாம் முழக்கங்கள் இருந்தனவாம்! அலங்காரங்கள் இருந்தனவாம்! இப்படித்தான் அந்தக் கூட்டத்திலே அந்தக் கட்சியின் தலைவர் கூறியுள்ளார். அவர் ஆட்சி அதிகாரத்திலே இருந்த போது மக்கள் நலனை சிந்திக்க எங்கே நேரம் இருந்தது? நாளும் ஒரு பாராட்டு விழா! பொழுதும் ஒரு நன்றி அறிவிப்பு விழா! இவ்வாறு தான் அவர் மக்கள் தொண்டாற்றினார். யார் இவரிடம் நன்றி பாராட்டி நன்றிக் கூட்டங்கள் நடத்தினார்கள்? யாருக்கெல்லாம் இவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி சலுகைகளை வழங்கினாரோ; யாரெல்லாம் இவரது சலுகைகளை எதிர்பார்த்து இருந்தார்களோ; அவர்கள் தான் இவருக்கு பாராட்டு விழாவும் நன்றி விழாவும் நடத்தினார்கள்.

சமீபத்தில் வீட்டுவசதி வாரிய வாடகை வீட்டை ஒதுக்கியதற்கு அப்போது நன்றி கூறிவிட்டு, தன்னை குற்றம் சாட்டி இப்போது பேசுவது நன்றி மறந்த செயல் என்று ஒரு அரசியல் பிரமுகரைப் பற்றி இவர் குறை கூறியுள்ளார்.

அதற்கு பதில் அளித்துள்ள அந்த அரசியல் பிரமுகர் இவர் சலுகைகளை எவ்வாறு வழங்கினார் என்பதை நாடே அறியும் வண்ணம் எடுத்துக் கூறியுள்ளார். வாடகைக்கு வழங்கிய வீட்டிலிருந்து தன்னை வெளியேற்றி வீதியில் நிறுத்த முனைந்தது தான் அந்தத் தலைவரின் பெருந்தன்மை என்று கூறியுள்ளார். மேலும் முல்லைப் பெரியாறு, காவிரி நீர்ப் பிரச்சினை ஆகியவற்றில் காட்டாத தீவிரத்தை வாடகைதாரரை வெளியேற்றும் வழக்கில் காட்டியதாகவும்; கூடுதல் தலைமை வழக்கறிஞரை இந்த வழக்கில் முதலிலிருந்தே அரசு தரப்பில் ஆஜராகி

வாதிடச் செய்ததாகவும்; உயர் நீதிமன்றம் அந்த அரசியல் பிரமுகருக்கு ஆதரவாக வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து அது இன்றும் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்து, இவரின் பெருந்தன்மையை பட்டவர்த்தனப்படுத்தியுள்ளார்.

காஞ்சிபுரம் கூட்டத்திற்கு வரும் வழியெல்லாம் இருந்த அலங்காரங்களையும், முழக்கங்களையும் பார்த்தவுடன் இவருக்கு பழைய பாராட்டு விழாக்கள் நினைவிற்கு வந்துவிட்டது போலும்! எனவே தான், தான் முதலமைச்சராக இல்லையே என்ற ஆற்றாமையால் உந்தப்பட்டு, என் மீதுள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, தனக்கு வாக்களிக்காத மக்களிடம் அவரது கட்சியின் தோல்வி மக்களுடைய தோல்வி என்றும்; அவர்களே தேடிக்கொண்ட தோல்வி என்றும் அங்கலாய்த்து இருக்கிறார். இது தான் ஜனநாயகத்தின் மீது இவர் கொண்டுள்ள மதிப்பு.

மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தருகின்ற அரசு தான் இது என்பதை உணர்ந்துள்ள காரணத்தால் தான், தமிழக மக்கள் சமீபத்தில் நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தல்களிலும், எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெருவாரியான வெற்றியை தந்திருக்கிறார்கள். ஏற்றம் தரும் அரசு இது; அவர்கள் கூறுவது போல் ஏமாற்றம் தரும் அரசு அல்ல என்பதால் தான் தங்களது நம்பிக்கையை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளார்கள். இடைச் செருகல்களால் இந்த அரசின் நல்ல திட்டங்களை மக்களிடமிருந்து மறைக்கவோ, மக்களை ஏமாற்றவோ முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்லாட்சி நடத்தும் எனது தலைமையிலான அரசுக்கு நற்சான்று அளித்த தமிழக மக்களின் வாழ்வு இன்னும் ஏற்றம் பெற, பல்வேறு திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் வளர்ச்சியாக இருக்க வேண்டும். பணக்காரர்கள்; கல்வி அறிவில் நன்கு தேர்ச்சி பெற்றோர்; வாழ்வில் வசதிகள் பல பெற்றோர் ஆகியோர் மட்டும் வாழ்வில் மேலும் முன்னேற்றம் பெற வழிவகை செய்யும் வளர்ச்சி **உண்மையான** வளர்ச்சி அல்ல. அத்தகைய பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் **நாடு** முன்னேறலாம். ஆனால் முன்னேற்றம் காண வேண்டிய **மக்கள்** முன்னேற முடியாது. அடித்தட்டு மக்களின் உயர்வே உண்மையான பொருளாதார வளர்ச்சியாகும். இதனை உணர்ந்துள்ள எனது அரசு, ஏழை மக்கள் உடனடியாக பயன்பெறும் வண்ணம், எந்தவித விலையும் கொடுக்காமல், பெறக்கூடிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இந்த திட்டங்கள் மக்கள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையிலும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு வழிவகை செய்யும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. ஏழை, எளியோர், உழவர், நெசவாளர், தொழிலாளர், மீனவர், மகளிர் மற்றும் மாணவர் உட்பட அனைத்து பிரிவினரது வாழ்க்கைத் தரம் உயர நடவடிக்கைகள் **தொடர்ந்து** எடுக்கப்பட்டு வருகின்றன.

சமூகப் பாதுகாப்பிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் அதே நேரத்தில் மனித வளர்ச்சிக் குறியீடுகள் நமது மாநிலத்தில் உயர வேண்டும் என்ற அடிப்படையில், பல விலையில்லா திட்டங்களையும் எனது அரசு நிறைவேற்றி வருகிறது.

ஏழை, எளிய மக்கள் கண்ணியமான வாழ்வு வாழ, அரசு அவர்களுக்கு சலுகைகள் வழங்க வேண்டியது அவசியம் என்றாலும் கூட; அரசின் சலுகைகளை மட்டுமே எப்போதும் சார்ந்தில்லாமல், வாழ்வில் வளம் பெற மக்கள் தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வேண்டும் என்பதும்; அதற்கான பொருளாதார வளத்தை அவர்கள் பெற வேண்டும் என்பதும்; இந்த அரசின் முக்கிய குறிக்கோளாகும். அதன் அடிப்படையில், குடும்ப அளவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழகத்திலே மீண்டும் ஒரு வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தினால், அதன் மூலம்

தமிழகம் வளம் பெறுவதோடு மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலே வசிக்கும் ஏழை, எளிய மக்களின் பொருளாதார நிலையும் மேம்படும் என்பதால் கலப்பின ஜெர்சி பசுக்கள் வழங்கும் ஒரு பொருளாதார மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராமங்களில் உள்ள ஏழைகளுக்கு, இந்தத் திட்டத்தின் கீழ் பசுக்கள் வழங்கப்படுகின்றன. பயனாளிகளே அரசு அலுவலர்களுடன் சென்று, பசுக்களை தேர்வு செய்வதற்கான வழிவகையும் செய்யப்பட்டு, அவ்வாறு வாங்கப்படும் பசுக்கள் காப்பீடும் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு 12,000 பேர்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்க திட்டமிட்டதில், இதுவரை 7,887 பேருக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ளோருக்கு, இந்த நிதியாண்டு முடிவதற்குள் பசுக்கள் வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள 7 லட்சம் குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு 4 ஆடுகள் வீதம் வழங்கி, அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டத்தையும் இந்த அரசு துவக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்படி, இந்த ஆண்டு ஒரு லட்சம் பேருக்கு தலா 4 ஆடுகள் வழங்க திட்டமிட்டதில், இதுவரை 60,765 பயனாளிகளுக்கு தலா நான்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ளோருக்கு இந்த நிதியாண்டின் இறுதிக்குள் ஆடுகள் வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராஜன் அரசுத் துறையிலே பணியாற்றக்கூடிய கடைநிலை ஊழியர்களுக்கு இணையான சம்பளமாவது, இதர தொழிலாளர்களுக்கும் வழங்குவதற்கான சட்டம் இயற்றினால், அது வறுமையை குறைக்க உதவும் என்று கூறினார். இது எவ்வாறு வறுமையை குறைக்க உதவும் என்பது தெரியவில்லை.

ஆனால் விலையின்றி வழங்கப்படும் கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் திட்டத்தின் மூலம், பயனாளிகள் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு, தங்களது சொந்தக் கால்களிலேயே நிற்க முடியும். இதன் மூலம் வறுமை குறைக்கப்படும் என்பதுதான் எங்களது திடமான நம்பிக்கை.

நான் இப்போது சுட்டிக் காட்டியதைப் போல, சமுதாயத்தில் பிறரை சார்ந்து வாழ்பவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும், சமுதாயத்தில் தாமும் ஓர் அங்கம் என்ற எண்ணத்துடன் தலை நிமிர்ந்து வாழ வகை செய்யும் வண்ணம் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூக மூலதனத்திற்காகவும்; மனித வள மேம்பாட்டிற்காகவும்; ஏழை எளிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும்; பல்வேறு விலையில்லாத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த விலையில்லாத் திட்டங்கள் அனைத்தையும் இது போன்ற உன்னத குறிக்கோள்களுடன் தான் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. ஆனால் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில், இது போன்ற சமூக மூலதனம் மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்காக திட்டங்களைத் தீட்டாமல்; சொந்தக் குடும்ப மேம்பாட்டிற்கான இலவசத் திட்டங்கள் தீட்டப்பட்டன. எடுத்துக்காட்டாக, 3,687 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலவசமாக வழங்கப்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் 4,000 கோடி ரூபாய் அளவுக்கு சொந்தக் குடும்ப வருமானத்தை பெருக்கிக் கொண்டனர். அதாவது, கேபிள் டி.வி. இணைப்பு மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு, பொது மக்களிடமிருந்து அதிக அளவில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாகத் தான், முந்தைய அரசால் 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு கேபிள் டி.வி. நிறுவனம், அவர்களாலேயே முடக்கி வைக்கப்பட்டது. கேபிள் டி.வி. தொழிலில் இருந்த இந்த ஏகபோகத்தைத் தடுத்து பொதுமக்கள் குறைந்த கட்டணத்தில் சேனல்கள் பார்க்கும் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதால் தான், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தை புனரமைத்து; அதற்கு தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் என பெயர் மாற்றமும்

செய்யப்பட்டது. இந்த தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம், **2.9.2011** அன்று தனது சேவையை முழு அளவில் துவங்கியது. இதன் மூலம் **70** ரூபாய் என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் தொலைக்காட்சி சேவை மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் மூலம் இணைப்புப் பெற்றுள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் மாதந்தோறும் **70** ரூபாய் முதல் **100** ரூபாய் வரை சேமிப்பு ஏற்படுகிறது. அதாவது **90** முதல் **95** சானல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் தமிழக மக்களுக்கு **150** கோடி ரூபாய் அளவுக்கு சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழ்நாட்டில் நிலவும் சட்டம் – ஒழுங்கு குறித்து தவறான கருத்துகள் இங்கே எதிர்க்கட்சிகளை சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களால் எடுத்து வைக்கப்பட்டன. இந்த அரசைப் பொறுத்தவரையில், சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ரவுடிகள்; கொலை, கொள்ளை மற்றும் சமுதாய குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, **2011** ஆம் ஆண்டில் முதல் ஐந்து மாதங்களில், **193** நபர்கள் மட்டுமே குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். அதே சமயத்தில், இந்த அரசு பொறுப்பேற்ற பின், அதாவது, **2011–**ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையுள்ள ஏழு மாதங்களில், **1397** நபர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இதன் காரணமாக, கொடுங்குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. கொலைகளில் மிகவும் கொடூரமான ஆதாயக் கொலைகள் **2010** ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, **2011** ஆம் ஆண்டு **19.6** விழுக்காடு குறைந்துள்ளது. இந்த அரசு எடுத்து வரும் கடுமையான நடவடிக்கைகளின் விளைவாக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சீரழிந்திருந்த சட்டம் ஒழுங்கு தற்போது சீரடைந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, மாநிலத்தில் உறவுகளுக்குள் ஏற்படும் தகராறு; தனிப்பட்ட விரோதம்; கொடுக்கல் வாங்கல் போன்றவற்றின் காரணமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்று வரும் கொலைகளை வைத்து, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு பராமரிப்பையே குறை கூறுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

நில அபகரிப்பு புகார்களைப் பொறுத்தவரையில், இந்த அரசால் அமைக்கப்பட்ட நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகளில் இதுவரை **27268** புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மீது விசாரணை நடத்தப்பட்டு, குற்ற நிகழ்வுகள் உள்ளதாக தெரிய வந்த நிகழ்வுகள் குறித்து இதுவரை **1056** வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. **1022** எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்குகளில் இதுவரை **696** கோடி ரூபாய் மதிப்புள்ள **1256.5** ஏக்கர் நிலமும்; **435333** சதுர அடி வீட்டு மனையும்; உண்மையான நில உரிமையாளர்கள் மனம் குளிரும் வகையில் நில அபகரிப்பாளர்கள் இடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. எனது அரசின் இந்த நடவடிக்கை காரணமாக, பொதுமக்கள் நில ஆக்கிரமிப்பு கும்பல்களின் பிடியிலிருந்து விடுபட்டு; தங்கள் சொத்துகள் உரிய பாதுகாப்புடன் உள்ளன என்ற உணர்வோடு நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழகத்தின் வங்காள விரிகுடா பகுதியில் **25.12.2011** அன்று உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், **26.12.2011** அன்று வலுவடைந்து புயலாக உருவெடுத்தது. “தானே” என்று பெயரிடப்பட்ட இந்தப் புயல் **30.12.2011** அன்று காலை **6.30** மணியளவில் கடலூர் கரையை கடந்து, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வரலாறு காணாத அளவிற்கு, சேதத்தை ஏற்படுத்தியதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். மணிக்கு **140** கிலோமீட்டர் என்ற அளவில் கடும் சீற்றத்துடன் கடலூர் கரையைக் கடந்த இந்த “தானே” புயல், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில்

உள்ள கட்டமைப்புகளையும், பயிர்களையும், வீடுகளையும், படகுகளையும் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கியது. மக்களின் உடைமைகளையும், வாழ்வாதாரங்களையும் இந்தப் புயல் சூறையாடிச் சென்றுவிட்டது. மக்களின் பொருளாதாரத்தை, அதிலும் குறிப்பாக, பலா, முந்திரி போன்ற நீண்டகாலப் பயிர்களின் மூலம் வாழ்வாதாரம் பெற்று வந்த மக்களின் பொருளாதாரத்தை, பல ஆண்டுகளுக்கு பின் தள்ளி விட்டது. இந்தப் புயல், ஆயிரக்கணக்கான மரங்களை சாய்த்ததோடு மட்டுமல்லாமல், மின் கட்டமைப்புகளையும் உருக்குலைத்துவிட்டது. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 5.77 லட்சம் குடிசைகள் மற்றும் வீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்துவிட்டன. 1,29,000 எக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் அழிந்துவிட்டன. 35,141 எக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த முந்திரி மற்றும் பலா தோப்புகள் நாசமடைந்துவிட்டன.

"தானே" புயல் தமிழ்நாட்டை தாக்கும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்த உடனேயே, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்த அரசு துரிதமாக மேற்கொண்டது. தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த சுமார் 6000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று தங்க வைக்கப்பட்டு; அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர். மிகக் கடுமையான புயல் காற்று வீசும் என்பதால், புயல் கரையை கடந்த நாளுக்கு முந்தைய நாளான 29.12.2011 அன்று இரவு முதல், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மின் இணைப்பு முழுவதுமாக துண்டிக்கப்பட்டது. அரசு இயந்திரம் முழுவதுமாக முடுக்கிவிடப்பட்டு, அரசு அதிகாரிகளும், பணியாளர்களும் விழிப்புடன் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் தணிப்புப் படையைச் சார்ந்த நான்கு குழுக்கள், கடலூர், நாகப்பட்டினம், சென்னை, திருவள்ளூர் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவ்வாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் மனித உயிரிழப்புகள் பெருமளவில் தவிர்க்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியைப் போன்ற ஒரு பேரிடர் இந்தப் புயல் காரணமாக ஏற்பட்ட போதிலும், அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகவே பெருமளவு உயிரிழப்பு தடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புயல் காரணமாக, 51 உயிரிழப்புகள் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்பட்டன.

140 கிலோ மீட்டர் வேகத்துடன் கடலூர் கடற்கரையை நேரடியாகத் தாக்கி கடந்துள்ள இதற்கு இணையான அதிவேக புயல் (Very severe cyclonic storm), இதற்கு முன்னர் தமிழ்நாட்டில் 1977 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் அருகிலும்; 1963 ஆம் ஆண்டு கடலூர் அருகிலும் கரையை கடந்துள்ளது. பெரும் புயல் என்பதாலேயே கடும் சேதத்தை இது ஏற்படுத்திவிட்டது.

இந்தப் புயல் காரணமாக கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 577584 குடிசைகள் மற்றும் ஓடு வீடுகள் முழுமையாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 277 கால்நடைகள் இறந்துவிட்டன. மாநில அளவில் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களில் 1,47,601 எக்டேர் நெற்பயிர்களும்; 12,326 எக்டேர் கரும்புப் பயிர்களும்; 34,096 எக்டேர் முந்திரி பயிர்களும்; 39,939 எக்டேர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த வாழை, பயறு, பருத்தி, எண்ணெய் வகைகள் மற்றும் பலா மரங்கள் ஆகியவை அழிந்துவிட்டன. கட்டுமரங்கள், வள்ளம், FRP படகுகள், விசைப் படகுகள் ஆகிய 5,854 மீன்பிடி படகுகள் சேதமடைந்துள்ளன. இது மட்டுமல்லாமல் 6,110 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

புயல் கரையை கடந்த சில மணி நேரங்களிலேயே, புயலினால் ஏற்பட்ட பாதிப்புகள் முழு அளவில் தெரிய வருவதற்கு முன்னரேயே, மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து நான் ஆய்வு மேற்கொண்டேன். உடனடி நிவாரணப் பணிகளுக்காகவும்; அடிப்படை கட்டமைப்பு வசதிகளை சீரமைக்கவும்; 150 கோடி ரூபாயை அன்றே, அதாவது 30.12.2011 அன்றே, விடுவிக்கவும் நான் ஆணையிட்டேன். பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைச்சர்களையும், உயர்

அதிகாரிகளையும் அனுப்பி வைத்தேன். மேலும், நிவாரணப் பணிகளை முழு மூச்சில் மேற்கொள்வதற்காக 6 மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள்; 11 துணை ஆட்சியர்கள்; மற்றும் 4 வளர்ச்சி திட்ட அதிகாரிகள்; 100 வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர்கள் கடலூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் "தானே" புயல் தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறப்பு நிவாரண உதவிகளை வழங்கவும்; அடிப்படை கட்டமைப்புகளை சீர்செய்யவும்; கூடுதலாக 700 கோடி ரூபாய் 3.1.2012 அன்றே ஒதுக்கப்பட்டது. ஆக மொத்தம், இந்த அரசால் 850 கோடி ரூபாய் உடனடியாக விடுவிக்கப்பட்டது.

பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 1000 ரூபாய் நிவாரண உதவித் தொகை; 10 கிலோ அரிசி; ஒரு வேட்டி ஒரு சேலை; ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. பகுதியாக பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளுக்கு 2,500 ரூபாயும்; முழுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளுக்கு 5,000 ரூபாயும்; ஓடுகளை இழந்த வீடுகளுக்கு 5,000 ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையின்படி சேதமடைந்த குடிசைகளுக்கு 2,000 ரூபாய் தான் வழங்கப்பட வேண்டும் என்று இருந்தாலும், கூடுதல் நிவாரண தொகையை நாங்கள் வழங்கி உள்ளோம். நெல் மற்றும் நீர்ப்பாசனம் பெறும் பயிர்களுக்கு எக்டேருக்கு 4,000 ரூபாயும்; பலா, முந்திரி போன்ற நிரந்தரப் பயிர்களுக்கு எக்டேருக்கு 6,000 ரூபாயும் நிவாரணமாக வழங்கிட மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றாலும்; நெற்பயிருக்கு எக்டேர் ஒன்றுக்கு 10000 ரூபாயும்; மற்ற நீர்ப்பாசன பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 7500 ரூபாயும் நிவாரணமாக எனது அரசு வழங்கியுள்ளது. பலா, முந்திரி போன்ற தோட்டப் பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 9,000 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கி உள்ளோம். இதே போன்று, சேதமடைந்த பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு 7,500 ரூபாயும்; பகுதி சேதமடைந்த படகுகளுக்கு 2,500 ரூபாயும் வழங்க மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீனவர் நலனைக் கருத்தில் கொண்டு, முழுவதும் சேதமடைந்த வலைகளுடன் கூடிய கட்டுமரங்களுக்கு 32,000 ரூபாயும்; பகுதி சேதமடைந்த வலைகளுடன் கூடிய கட்டுமரங்களுக்கு 10,000 ரூபாயும்; முழுவதும் சேதமடைந்த FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு 75,000 ரூபாயும்; பகுதி சேதமடைந்த FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு 20,000 ரூபாயும்; முழுவதும் சேதமடைந்த விசைப் படகுகளுக்கு 5 லட்சம் ரூபாயும்; பகுதி சேதமடைந்த விசைப் படகுகளுக்கு 3 லட்சம் ரூபாயும்; வலைகள் மட்டுமே சேதமடைந்த இனங்களுக்கு 10,000 ரூபாயும்; சேதமடைந்த என்ஜின்களுக்கு 5,000 ரூபாயும் எனது அரசு வழங்கியுள்ளது. இதே போன்று மாடு இறப்புக்கு 20,000 ரூபாயும்; ஆடு இறப்புக்கு 2,000 ரூபாயும்; கோழி இறப்புக்கு 100 ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கி உள்ளோம்.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உயிரிழந்த 51 நபர்களின் குடும்பங்களுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் வீதம் 1 கோடியே 2 லட்சம் ரூபாயும்; கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 5,77,584 சேதமடைந்த குடிசைகள் மற்றும் ஒட்டு வீடுகளுக்கு, பகுதி சேதமடைந்த குடிசை வீடு ஒன்றுக்கு 2,500/- ரூபாய் என்ற வீதத்திலும்; முழுவதும் சேதமடைந்த குடிசை வீடு ஒன்றுக்கு 5,000/- ரூபாய் என்ற வீதத்திலும்; சேதமடைந்த ஒட்டு வீடு ஒன்றுக்கு 5,000/- ரூபாய் என்ற வீதத்திலும் 158 கோடியே 72 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, பாதிக்கப்பட்ட கிராமங்களில் சேதமடையாத குடிசைகள் மற்றும் ஒட்டு வீடுகளில் வசிக்கும் குடும்பங்களின் உடைமைகள் இழப்புக்கு, நிவாரணமாக குடும்பம் ஒன்றுக்கு 2,000/- ரூபாய் என்ற வீதத்தில் 1,59,902 குடும்பங்களுக்கு 31 கோடியே 98 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது. கால்நடை கோழியினங்கள் இறப்புக்கு நிவாரணமாக 19 லட்சத்து 57 ஆயிரம் ரூபாயும்; மாநிலம் முழுவதும் பயிர் பாதிப்பிற்காக 3,67,324 விவசாயிகளுக்கு 215 கோடி ரூபாய் நிவாரண உதவித் தொகையாகவும்; வள்ளம் படகுகள் வலைகள் பாதிப்புகளுக்கு 11 கோடியே 89 லட்சம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கி உள்ளோம்.

30.12.2011 அன்று "தானே" புயல் கடலூர் கரையை கடந்த போது மரங்கள் விழுந்ததன் காரணமாக, கடலூர் மாவட்டத்தில் 1,458 இடங்களில் சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. 90 JCB இயந்திரங்கள், 3 கிரேன்கள், லாரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி 1000 பணியாளர்கள் சாலையில் விழுந்த மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக, 31.12.2011 அன்றே அனைத்து சாலைகளிலும் போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. புயல் பாதிப்பால் மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான பால் கிடைப்பதில் இருந்த பற்றாக்குறை உடனடியாக தீர்க்கப்பட்டது. ஆவின் நிறுவனம் மூலம் கடலூர் மாவட்டத்தில், சாதாரணமாக நாளொன்றுக்கு 20,500 லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. எஞ்சிய பால் தேவை, தனியார் பால் நிறுவனங்களால் நிறைவு செய்யப்பட்டு வந்தது. தனியார் பால் நிறுவனங்கள் தாங்கள் விநியோகம் செய்யும் பால் அளவை குறைத்ததால், அதனை ஈடு செய்யும் பொருட்டு ஆவின் நிறுவனம் கடலூர் மாவட்டத்தில் 35,000 லிட்டர் பால் விநியோகத்தை மேற்கொண்டது. 2,500 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 குளிரூட்டும் வசதி செய்யப்பட்ட வாகனங்கள் சென்னையிலிருந்து கடலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சில்லறை அளவில் பால் விநியோகம் செய்வதற்காக, 9,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நடமாடும் பால் டேங்கரும் சென்னையிலிருந்து கடலூருக்கு அனுப்பப்பட்டு, பால் தேவை நிறைவு செய்யப்பட்டது.

"தானே" புயல் கடலூர் மாவட்டத்தை முற்றிலும் புரட்டிப் போட்டுவிட்ட காரணத்தால், குடிநீர் விநியோகம், மின் விநியோகம் ஆகியவை முழுவதுமாக பாதிக்கப்பட்டன. கடலூர் மாவட்டத்தில் உள்ள 6 நகராட்சிகளில் உள்ள 174 வார்டுகளிலும் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டதுடன்; குடிநீர் விநியோக சீரமைப்புகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அதன் காரணமாக 122 வார்டுகளில் குடிநீர் விநியோகம் 2.1.2012 அன்று சீரமைக்கப்பட்டு, வழக்கம் போல் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. 57 லாரிகள் மூலம் மீதமுள்ள வார்டுகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டது. அதே போன்று, 16 பேரூராட்சிகளிலும், ஜெனரேட்டர்களை பயன்படுத்தி குடிநீர் வழங்கப்பட்டது. கிராமப் பகுதிகளில் உள்ள 11 கூட்டுக் குடிநீர் திட்டங்களில், 5 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு மின்வசதி சீரமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது. மேலும் 300–க்கும் மேற்பட்ட ஜெனரேட்டர்கள் வாடகைக்கு பெறப்பட்டு 100–க்கும் மேற்பட்ட தண்ணீர் லாரிகள் மூலமாக ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் தடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதைக் கண்காணிக்க ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் தலைமையில், 8 அதிகாரிகள் ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கப்படுவதை கண்காணித்தனர். இதே போன்று, விழுப்புரம் மாவட்டத்திலும் ஜெனரேட்டர்கள் மூலமும் லாரிகள் மூலமும் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் புயல் பாதித்த தினம் முதலே மேற்கொள்ளப்பட்டன. புயல் வெள்ள பாதிப்புகள் ஏற்படும் சமயத்தில், சாதாரணமாக குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவது இல்லை. எனவே தான், புயல் வெள்ள பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் தொற்றுநோய் ஏற்படுவது சாதாரண நிகழ்வாக எப்போதும் இருந்து வந்துள்ளது. இந்த அரசின் மிகப் பெரும் முயற்சியால், புயல் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டதால், இந்த மாவட்டங்களில் எவ்வித தொற்று நோயும் ஏற்படவில்லை என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளிலும் குடிநீர் பாதிப்புகள் விரைந்து சீர் செய்யப்பட்டு, தற்போது இயல்பாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! "தானே" புயலால் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் மின் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றியும்; அரசு மேற்கொண்ட

சீரமைப்பு பணிகள் பற்றியும் இம்மாமன்றத்தில் சற்று விரிவாக எடுத்துக் கூறுவது எனது கடமையாகும்.

"தானே" புயலால் கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் முழுவதுமாக மின் துண்டிப்பு ஏற்பட்டது. இம்மாவட்டத்தில் உள்ள 47 துணை மின் நிலையங்களும் பாதிக்கப்பட்டதால், மாவட்டத்தில் மின் விநியோகம் முற்றிலும் துண்டிக்கப்பட்டது. கடலூரில் அமைந்துள்ள 230 கி.வோ. துணை மின் நிலைய கட்டுமானங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்நிலையத்தை அடைவதற்கான வழித்தடம் முழுவதிலும் ஏராளமான மரங்கள், சுமார் 6 கி.மீ. தூரம் சாய்ந்து விழுந்து, பாதை அடைப்பட்டிருந்தது. கடலூர் மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட மின் விநியோகத்தை சீரமைக்க 35 உயர் மின்னழுத்த கோபுரங்கள், 60,000 மின் கம்பங்கள் மற்றும் 4,500 மின் மாற்றிகள் மாற்றப்பட வேண்டியிருந்தன.

இப்புயலினால் மிக அதிக உயர் மின்னழுத்த கோபுரங்கள்; துணை மின் நிலைய உபகரணங்கள்; மின் மாற்றிகள்; மின் கட்டமைப்பு; மின் கம்பங்கள்; மின் கம்பிகள் மற்றும் இதர மின் தளவாடப் பொருட்கள் சேதம் அடைந்தன.

சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, ஒரு மேலாண்மை இயக்குநர்; இரண்டு வாரிய உறுப்பினர்கள்; மூன்று தலைமைப் பொறியாளர்கள் மற்றும் 14 மேற்பார்வை பொறியாளர்கள் / செயற் பொறியாளர்கள் தலைமையில் 1000 பணியாளர்கள் அடங்கிய குழு **31.12.2011** முதலே பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பிற மாவட்டங்களிலிருந்தும், தளவாடப் பொருட்கள், லாரிகள் மற்றும் உபகரணங்கள் உடனடியாக அனுப்பப்பட்டன. மின் தளவாட பொருட்கள் தேவையினைத் தொடர்ந்து அவசர கொள்முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

230 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு செல்லும் வழித் தடங்கள் தடைபட்ட போதும், மீட்புபணி பொறியாளர்களும், பணியாட்களும் அவ்விடங்களுக்கு நடந்தே சென்று 230 கி.வோ. கடலூர் துணை மின் நிலையத்திற்கு மின் விநியோகத்தை 24 மணி நேரத்தில் போர்க்கால அடிப்படையில் சீரமைத்தனர். நெய்வேலி அனல் மின் நிலைய நிலக்கரி சுரங்கத்துக்கு மின் விநியோகம் செய்யும் மின் தடத்தில், இரண்டு 230 கி.வோ. கோபுரங்கள் விழுந்ததால், நெய்வேலி அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தி பாதிப்படைந்தது. இப்பணி **72 மணி நேரத்தில்** சரி செய்யப்பட்டது. சாதாரணமாக இப்பணியை முடிக்க **10 நாட்கள்** தேவைப்படும் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 6.1.2012 முதல் 14.1.2012 வரை, 10,000 பணியாளர்களை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கடலூர் மற்றும் விழுப்புரம் பகுதிகளின் மின் சீரமைப்பு பணிக்கு ஈடுபடுத்தியது.

தற்போதும், கடலூர் மின் பகிர்மான வட்டத்தில் 236 பொறியாளர்களுடன் 4,100 பணி ஆட்களும்; விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தில் 26 பொறியாளர்களுடன் 840 பணியாட்களும் இரவு பகலாக விவசாய மின் சீரமைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

"தானே" புயலால் மொத்தம் 33 உயர் மின்னழுத்த கோபுரங்கள் மற்றும் 7 உயர் மின்னழுத்த மின் பாதைகள் பாதிப்படைந்திருந்தன. பாதிப்படைந்த 7 உயர் மின்னழுத்த பாதை மீட்பு பணிகள் உடனடியாக துவக்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் மிக அதிக பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி, இரவு, பகலாக பணியினை செய்து, சுமார் **5 மாதங்களில்** முடியக் கூடிய பணி **14 தினங்களுக்குள் முடிக்கப்பட்டது.** பாதிப்படைந்த 7 உயர் மின்னழுத்த பாதைகளும், படிப்படியாக சீர்செய்யப்பட்டு, 13.1.2012–க்குள் துணை மின் நிலையங்கள் இயங்கத் தேவையான உயர் அழுத்த மின்சாரம் கொடுக்கப்பட்டு, தாழ்வழுத்த மின் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

"தானே" புயலால் மின் விநியோகம் முற்றிலுமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில், மின் விநியோகத்தை சீரமைக்க 4,500 மின் மாற்றிகளும்; 3,266 கி.மீ. உயரழுத்த மின் பாதைகளும்;

**5,888** கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகளும் புதிதாக நிறுவ வேண்டி இருந்தது. தமிழ்நாடு மின் விநியோக செயல் தர விதிமுறைகளின்படி, ஒரு மின் மாற்றியை புதிதாக அமைத்து, அதற்குரிய தாழ்வழுத்த மற்றும் உயரழுத்த மின் பாதைகளையும் அமைத்து, மின் இணைப்பு வழங்க **மூன்று மாதங்களாகும்.**

மேலே கூறப்பட்ட அனைத்து மின் மாற்றிகளையும் மற்றும் மின் பாதைகளையும் சரிசெய்ய, **6,000 பணியாளர்கள்** சுமார் **100 நாட்கள்** பணி செய்ய வேண்டியிருக்கும். ஆனால் மின்வாரியம் போர்க்கால அடிப்படையில் மிக அதிகப் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி, இரவு பகலாக பணியினை செய்து **15 நாட்களில்** இது சரிசெய்யப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள சுமார் **120–க்கும்** மேற்பட்ட மின் கம்பம் தயாரிக்கும் இடங்களில் இருந்து சுமார் **29,000** மின் கம்பங்கள், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அது மட்டுமல்லாமல் ஆந்திரா, கேரளா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், ஒரிசா மற்றும் உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து **41,000** மின் கம்பங்கள் வாங்கப்பட்டன.

சிதம்பரம், பண்ருட்டி, விருத்தாச்சலம் மற்றும் குறிஞ்சிப்பாடி கோட்டத்தில் உள்ள அனைத்து அத்தியாவசிய மின் இணைப்புகளுக்கும் மின்சாரம் முழுவதுமாக வழங்கப்பட்டு விட்டது. கடலூர் மற்றும் நெல்லிகுப்பம் கோட்டத்தில் முறையே **95.23** சதவீதம் மற்றும் **97.90** சதவீதம் அத்தியாவசிய இணைப்புகளுக்கும் மின்சாரம் பொங்கல் பண்டிகைக்கு முன்பே வழங்கப்பட்டு விட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் **100** விழுக்காடு, அதாவது **8** லட்சத்து **44** ஆயிரத்து **124** வீட்டு மின் இணைப்புகளுக்கும்; மற்றும் கடலூர் மாவட்டத்தில் **6** லட்சத்து **91** ஆயிரத்து **847** வீட்டு மின் இணைப்புகளுக்கும்; அதாவது **97.53** விழுக்காடு அளவுக்கு, மின் விநியோகம் சீர்செய்யப்பட்டு மின்சாரம் பொங்கல் பண்டிகைக்கு முன்பே வழங்கப்பட்டு விட்டது. தற்போது அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. மேற்கண்ட மறுசீரமைப்பு பணிகளை குறித்த காலத்திற்கு முன்பே மேற்கொள்ள பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்கு கூடுதல் ஊதியம் அளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தெரு விளக்குப் பணிகளும் கிட்டத்தட்ட முழுவதுமாக சீரமைக்கப்பட்டுவிட்டன. ஊராட்சிகளில் இப்பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

கடலூர் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள **69,783** விவசாய மின் இணைப்புகளில் **67,100** விவசாய இணைப்புகளுக்கு மின் விநியோகம் சரிசெய்யப்பட்டு விட்டது. விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள **1,73,641** விவசாய மின் இணைப்புகளில் **1,71,700** விவசாய இணைப்புகளுக்கு மின் விநியோகம் சரிசெய்யப்பட்டு விட்டது.

கடலூர் மின் பகிர்மான வட்டத்தில் **27.1.2012** அன்று மின் தேவை ஏறக்குறைய **263.97** மெகாவாட் எனவும்; மின் பயனீட்டளவு **4.82** மில்லியன் யூனிட் எனவும் பதிவாகியுள்ளது. இதே நாளில் போன வருடத்தில் மின் தேவை **241.44** மெகாவாட்டாகவும்; மின் பயனீட்டளவு **4.39** மில்லியன் யூனிட்டாகவும் இருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகம் சீரமைக்கப்பட்டு விட்டது என்பதை இது தெளிவாக எடுத்துக்காட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் அடித்து ஏற்படுத்திய மின் கட்டமைப்பு சேதங்களை, புயல் வேகத்தில் செயல்பட்டு மூன்று மாதங்களில் செய்ய வேண்டிய பணிகளை பதினைந்தே நாட்களில் செய்து முடித்தும்; **6** மாதங்களில் செய்ய வேண்டிய பணிகளை **1** மாதத்தில் செய்து முடித்தும், சாதனை படைத்துவிட்ட தமிழ்நாடு மின் வாரியத் தலைவருக்கும், தமிழக மின் துறை பணியாளர்களுக்கும் இந்த அரசின் சார்பில் எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பயிர் சேதங்களுக்காக நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன என்றாலும், பலா, முந்திரி போன்ற தோட்டப் பயிர்களின் மூலம் வருவாய் ஈட்டி வந்த விவசாய பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தையே முற்றிலும் இழந்துள்ள நிலையில், தற்போது வழங்கப்பட்ட பயிர் சேத நிவாரண உதவிகள் மூலம் மட்டுமே,

அவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை திரும்பப் பெற இயலாது என்பதை இந்த அரசு அறியும். எனவே இந்த விவசாயிகளுக்கு ஒரு சிறப்பு நிவாரணத் தொகுப்பு உதவியை **11.1.2012** அன்று நான் அறிவித்தேன். அதன்படி புயலால் முற்றிலும் சேதமடைந்த, பலா, முந்திரி மற்றும் தென்னை ஆகிய தோட்டக்கலைப் பயிர்களை மீண்டும் பயிர் செய்வதற்கு விலை ஏதுமின்றி மரக்கன்றுகள் வழங்கப்படும். அந்த மரக்கன்றுகளை பராமரிப்பதற்கான பராமரிப்பு செலவுகளையும், விவசாயப் பணிகளுக்கான செலவுகளையும், ஓராண்டு காலத்திற்கு அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும்; விவசாய வேலையாட்களுக்கான செலவுகள் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என்றும்; தங்கள் சொந்த நிலங்களில் நில மேம்பாடு, குழி எடுத்தல் போன்ற விவசாயப் பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் இந்தத் திட்டத்தின்படி ஊதியம் வழங்கப்படும் என்றும்; இந்த விவசாயிகள் உளுந்து, பாசிப் பயறு, சிறு தானியங்கள் மற்றும் வேர்கடலை போன்ற ஊடுபயிர்களை சாகுபடி செய்து வருமானம் ஈட்டும் வகையில் இவற்றை பயிரிடுவதற்கான சான்று விதைகள்; உயிர் உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறுதளை (Mini Kit) விலை ஏதுமின்றி ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படும் என்றும் நான் அறிவித்து இருந்தேன். மேலும் நெல்; பயறு வகைகள்; எண்ணெய் வித்துகள் போன்ற பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு சான்று விதைகள்; உயிர் உரங்கள்; மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறுதளை (Mini Kit) ஒன்று விலை ஏதுமின்றி வழங்கப்படும் என்றும் அறிவித்து இருந்தேன்.

பலா, முந்திரி போன்ற தோட்டக் கலைப் பயிர்களை முற்றிலும் இழந்துள்ள விவசாயிகளுக்கு இந்த நிவாரணத் தொகுப்பு மட்டும் உரிய வாழ்வாதாரத்தை திரும்பப் பெற்றுத் தர இயலாது என்பதால், மேற்குறிப்பிட்ட விலையில்லா சிறுதளையையும் உள்ளடக்கிய விரிவான ஒரு நிவாரண தொகுப்பினை வழங்க நான் முடிவு செய்துள்ளேன். இந்த சிறப்பு நிவாரண தொகுப்பு உதவியை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## ஆண்டு பயிருக்கான சிறப்பு தொகுப்பு திட்டம்

### வேளாண் பயிர்கள்

- **54490** ஏக்கர் பரப்பிற்கு தேவையான **54,490** நெல் சிறுதளைகள் (Mini Kits) வழங்கப்படும். **20** கிலோ விதை நெல்; இரண்டு பொட்டலம் உயிர் உரங்கள்; மற்றும் **500** மில்லி தாவர பூச்சிக் கொல்லி கொண்டவையாக இந்த சிறுதளைகள் இருக்கும்.
- **6,250** ஏக்கர் பரப்பிற்கு தேவையான **6,250** மக்காச்சோள சிறுதளைகள் விழுப்புரம் மாவட்டத்தில் வழங்கப்படும். இச்சிறுதளை **6** கிலோ வீரிய ஒட்டு விதை மற்றும் இரண்டு பொட்டலங்கள் உயிர் உரங்கள் உள்ளதாக இருக்கும்.
- **3,83,660** ஏக்கர் பரப்பிற்கு தேவையான **3,83,660** பயறு வகை சிறுதளைகள் வழங்கப்படும். **8** கிலோ விதையுடன் இரண்டு பொட்டலங்கள் உயிர் உரங்கள் இந்த சிறுதளையில் அடங்கும்.
- **3,175** ஏக்கர் பரப்பிற்கு தேவையான **3,175** மணிலா சிறுதளைகள் வழங்கப்படும். **80** கிலோ விதைகள்; நான்கு பொட்டலங்கள் உயிர் உரங்களுடன் **500** மில்லி தாவர பூச்சிக் கொல்லி இந்த சிறுதளைகளில் இருக்கும். இச்சிறுதளைகள் **34** கோடியே **86** லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

### தோட்டக்கலை பயிர்கள்

- இந்த ஆண்டு மார்ச் மாதம் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, பிப்ரவரி மாதத்தில், ஏக்கர் ஒன்றிற்கு ரூ.**1,540/–** ரூபாய் மதிப்புள்ள உயர் மகசூல் தரக் கூடிய வீரிய ரக காய்கறி விதைகள்; உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக் கொல்லிகள் அடங்கிய சிறுதளைகள் வழங்கப்படும்.

## நீண்ட கால பயிர்களுக்கான சிறப்பு தொகுப்பு திட்டம்

### தென்னை

- "தானே" புயல் காரணமாக கடலூர் மாவட்டத்தில் 1284 ஹெக்டேரிலும்; விழுப்புரம் மாவட்டத்தில் 578 ஹெக்டேரிலும்; ஆக மொத்தம் 1832 ஹெக்டேர் பரப்பில் இருந்த தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன.
- முறிந்த மற்றும் சேதாரத்திற்குள்ளான தென்னை மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மரம் ஒன்றிற்கு 500 ரூபாய் வீதம் தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென 16 கோடியே 3 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும். மேலும் 100 சங்கிலி ரம்பங்கள் (Chain Saws) வாடகையின்றி விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
- தென்னை மரங்களை இழந்த விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக ஊடுபயிர் பயிரிடும் வகையில், ஊடுபயிருக்கான சிறுதளைகள் வழங்கப்படும். தென்னங்கன்றுகளை மீண்டும் நடுவதற்காக அரசு தென்னை நாற்று பண்ணைகளிலிருந்து 3,20,600 தென்னங்கன்றுகள் 80 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.
- மீண்டும் நடப்பட்ட தென்னை மரங்களுக்கு தேவையான யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், உயிர் உரங்கள் மற்றும் தென்னை நுண்ணூட்ட கலவை ஆகியவை வழங்கப்படும். இதற்காக 5 ஆண்டுகளில் ஒரு ஹெக்டேருக்கு 73,859 ரூபாய் செலவிடப்படும். இதற்கான மொத்த செலவு 13 கோடியே 53 லட்சம் ரூபாய் ஆகும். இதன் காரணமாக 7,083 தென்னை விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை திரும்பப் பெற இயலும்.

## முந்திரி மற்றும் பிற தோட்டக்கலை நீண்ட கால பயிர்கள்

### விழுந்த மரங்களை வெட்டி அகற்றுதல் மற்றும் அதற்கு தேவையான இயந்திரங்கள் வழங்குதல்

- முந்திரி மற்றும் பலா தோப்புகள் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள், விழுந்த மரங்களை அகற்றிட தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக, சராசரியாக ஏக்கர் ஒன்றுக்கு, ஏற்படும் 6,000 ரூபாய் செலவினம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இதற்கென ஏற்படும் செலவு 54 கோடியே 78 லட்சம் ரூபாய் ஆகும். இந்த மரங்களை வெட்டுவதற்குத் தேவையான சங்கிலி ரம்பக் கருவிகள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படும். இதற்கு 3 கோடி ரூபாய் செலவு ஏற்படும். இவ்வாறு வெட்டப்பட்ட மரங்களை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கு தேவையான உதவிகளை அரசு மேற்கொள்ளும்.
- மரங்கள் வெட்டி எடுக்கப்பட்ட பின், அடிக்கட்டையையும் அகற்றிய பின்னரே அத்தோட்டங்களில் உழவுப் பணியும், ஊடுபயிர் சாகுபடியும் மேற்கொள்ள இயலும் என்பதால்; அடிக்கட்டை அகற்றும் பணி இயந்திர உதவியுடன் வேளாண்மை பொறியியல் துறை மூலம் 136 கோடியே 94 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

### உழவு

- 91,293 ஏக்கர் பரப்பளவில் பாதிப்புக்குள்ளான நிலங்களில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் உழவுப் பணிகள் மேற்கொள்ளப்படும். விசை உழுவைகள், அதாவது Power Tiller–கள் மூலம் இப்பணி மேற்கொள்ளப்படும். இதற்காக அரசுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் 3 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

### குழி எடுத்தல் மற்றும் கன்று நடுதல்

- ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மூலமாக மரக்கன்றுகளை நடத் தேவையான குழிகளை எடுத்தல் மற்றும்

நடவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ், இதற்கென 31 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும்.

**சாகுபடிக்கான உதவி**

❖ 1,20,103 ஏக்கர் பரப்பளவில் மறு சாகுபடி செய்ய தேவையான உதவிகள் வழங்கப்படும். 70 லட்சம் ஒட்டு முந்திரி கன்றுகள் மற்றும் இதர மரக் கன்றுகள் வழங்கப்படும். உயிர் உரம் மற்றும் தாவர பூச்சி கொல்லி மருந்துகளும் வழங்கப்படும். இதற்கென முதல் வருடத்தில் 47 கோடியே 82 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

**நீர்பாசன வசதிகள்**

❖ வளர்ந்த முந்திரி, பலா போன்ற மரப் பயிர்களுக்கு மழை நீரே போதுமானது. தனியே நீர்பாசன வசதி ஏதும் தேவையில்லை. எனினும், புதிதாக நடவு மேற்கொள்ளப்படும் முந்திரி, பலா போன்ற நீண்டகால மரப் பயிர்களுக்கு, பாசன வசதி செய்து கொடுப்பது அவசியம். எனவே, 25 ஏக்கர் பரப்புக்கு ஒன்று என்ற வீதத்தில் ஆழ்துளை சமுதாய கிணறு அமைக்க வழிவகை செய்யப்படும். இந்த ஆழ்துளை சமுதாய கிணறுகள் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியமும்; இதர விவசாயிகளுக்கு 25 விழுக்காடு மானியமும் வழங்கப்படும். இதற்காக ஆகும் செலவினம் 27 கோடி ரூபாய் ஆகும். இதுவன்றி மின் இணைப்பு முன் பணம்; மின் கம்பம் ஊன்றுவதற்கான செலவு ஏதுமின்றி தமிழ் நாடு மின் வாரியம், முன்னுரிமையின் அடிப்படையில் இத்திட்டத்திற்கு மின் இணைப்பு வழங்கும்.

❖ நீர் பாசன ஆதாரம் ஏதுமில்லாத விவசாயிகளுக்கு, கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கான செலவினம் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மூலம் 4 மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். இதற்கான செலவினம் 62 கோடியே 57 லட்சம் ரூபாய் ஆகும்.

❖ முந்திரி கன்றுகள் மறு நடவு செய்யும் இடங்களில், நீராதாரம் உள்ள இடங்களில், நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்த இயலும். சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர் பாசன வசதி 9 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தித் தரப்படும்.

❖ முந்திரி, பலா, மா போன்ற பாதிக்கப்பட்ட நீண்டகால பயிர்கள் மீண்டும் பயிர் செய்வதற்கான உதவிகள் செய்யப்படுகின்றன. எனினும், அவை பலன் தர சில ஆண்டுகள் ஆகும் என்பதால்; அதுவரை விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் ஏற்படும் வகையில், உடனடியாக இரு பருவங்களுக்கு ஊடுபயிர் பயிரிடுவதற்கான உதவிகள் வழங்கப்படும். இதன் அடிப்படையில், சுமார் 91,000 ஏக்கர் பரப்பளவில் ஊடுபயிர் பயிரிடுவதற்கான சிறுதளைகள் 13 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பில் வேளாண்மைத் துறை மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

❖ புதிதாக நடவு செய்யப்பட்ட கன்றுகளுக்கு, இரண்டாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரை பராமரித்தலுக்கான செலவையும் அரசே ஏற்கும். பழுது கன்றுகளை நீக்கி, புதிய கன்றுகளை நடவு செய்தல்; ஆண்டுதோறும் உரங்கள், உயிர் உரங்கள், தாவர பூச்சிக்கொல்லிகள் மற்றும் இடைவெளி சாகுபடி பணிகளான களையெடுத்தல், செடிகளை சுற்றி தூர்வாருதல்; தேவையில்லாத கிளைகளை நீக்கி செடிகளின் வளர்ச்சியை ஊக்குவித்தல்; தேவையான தண்ணீர் பாய்ச்சுதல் ஆகியவை 334 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

❖ தற்போது நான் அறிவித்த இந்த சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ், வேளாண் பயிர்களுக்கு 65 கோடியே 22 லட்சம் ரூபாயும்; தோட்டக் கலைப் பயிர்களுக்கு 724 கோடியே 96 லட்சம் ரூபாயும்; ஆக மொத்தம் 790 கோடியே 18 லட்சம் ரூபாய் செலவில் இந்த சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

❖ விவசாயிகளுக்காக நான் தற்போது விவரித்த மறுசீரமைப்பு சிறப்புத் திட்டத்தை துரிதமாக செயல்படுத்துவதற்காக, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக, கூடுதல் ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலரை தலைவராகக் கொண்ட, ஒரு திட்ட மேலாண்மை மையம் அதாவது, Project Management Unit கடலூரில் ஏற்படுத்தப்படும். இந்தத் திட்ட மேலாண்மை மையத்திற்கு தேவையான களப் பணியாளர்களும் பணியமர்த்தப்படுவார்கள்.

❖ ''தானே'' புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் ''புயல் பாதித்த மாவட்டங்கள்'' என அறிவிக்கப்படும். இதன் மூலம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் நில வரி முழுவதுமாக ரத்து செய்யப்படும். மேலும், கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று நிலுவையில் உள்ள 440 கோடியே 11 லட்சம் ரூபாய் அளவிலான விவசாயிகளின் குறுகிய கால கடன் மத்திய கால கடனாகவும்; மத்திய கால கடன் நீண்ட கால கடனாகவும் மாற்றப்பட்டு, விவசாயிகளுக்கு புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்படும். இந்த நடவடிக்கையின் மூலம் சுமார் 1 லட்சத்து 10 ஆயிரம் விவசாயிகள் பயன் பெறுவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழகத்தை தாக்கிய "தானே" புயலின் தீவிரம் மற்றும் அதனால் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். இத்தகைய பாதிப்புகளை முழுவதும் சீர் செய்ய வேண்டுமென்றால், நிச்சயம் ஆறு மாத காலமாவது தேவை. ஆனால் எனது அரசு எடுத்த பெரு முயற்சியின் காரணமாக, பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரது இடைவிடாத உழைப்பினால், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளன. இதற்கு முன், சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட புயலுடன் தற்போதைய புயலை ஒரு சிறு ஒப்பீடு செய்தால் "தானே" புயலின் தாக்கம் எத்தகையது என்பதும் இந்த அரசின் துரித நடவடிக்கையும் இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவாக விளங்கும் என்று நம்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியில் 29.11.2000 அன்று கடலூருக்கு அருகில் 115 கிலோ மீட்டர் வேகத்தில் புயல் கரையை கடந்தது. அந்தப் புயலில் சுமார் 9,200 எக்டேர் பயிர்கள் தான் சேதமடைந்தன. 24 மின் மாற்றிகளும்; 4,329 மின் கம்பங்களும் தான் சேதமடைந்தன. இந்த சேதங்கள் மார்ச் 2001–ல் தான் முழுமையாக சீரமைக்கப்பட்டன. இதே போன்று, மீண்டும் தி.மு.க. ஆட்சியில் 27.11.2008–ல் காரைக்காலுக்கு வடக்கே, மணிக்கு 85 கிலோமீட்டர் வேகத்தில், "நிஷா'' என்னும் புயல் கரையைக் கடந்தது. இந்தப் புயலில் 11,600 மின் கம்பங்கள் தான் சேதமடைந்தன. இந்த மின் கம்பங்களும், கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, தர்மபுரி, வேலூர் என பரவலாக 11 மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் ஆகும். இவைகள் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தான் சீர் செய்யப்பட்டன. இவைகளுடன் ஒப்பிடும் போது, "தானே" புயலின் பாதிப்பு மிகவும் கடுமையானது ஆகும். இந்தப் புயல் கடலூர், விழுப்புரம் என்ற இரண்டு மாவட்டங்களில் ஒட்டுமொத்த கட்டமைப்பு சேதங்களை ஏற்படுத்திவிட்டது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, மாவட்டம் முழுமைக்கும், புதிதாக மின் இணைப்பு கொடுக்கப்படுவதைப் போன்ற ஒரு பெரும் பணி போர்க்கால அடிப்படையில் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய ஒரு மிகப் பிரம்மாண்டப் பணி மிகக் குறுகிய காலத்தில் செய்யப்பட்டுள்ளது. அதாவது ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும் என்றால் we have created a record. ஒரு புதிய சாதனையை படைத்திருக்கிறோம். அரசின் இந்தப் பணிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் பாராட்டுவீர்கள் என நான் நம்புகிறேன்.

இந்த புயலின் தாக்கம் மிகக் கடுமையானது என்பதை அரசியல் தலைவர்களும் உணர்ந்துள்ளார்கள் என்றே நான் நம்புகிறேன். எனவே தான், கடலூர் மாவட்டத்திற்குச் சென்ற

எதிர்க்கட்சித் தலைவர், அங்கே மின் அமைப்புகளை சீரமைக்க ஆறு மாத காலமாவது ஆகும் என்று கூறியுள்ளார். அதே போன்று, கடலூர் மாவட்டத்திற்கு சென்ற முன்னாள் முதலமைச்சரும் "இந்த மாதிரியான காரியங்களில், இந்த மாதிரியான நேரங்களில், எந்த அரசாக இருந்தாலும், அந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்பது தான் எதிர்க்கட்சியின் பணி என்று கருதுபவன் நான். எனவே, அந்தப் பணியை முறையாக செய்திருக்கிறேன்'' என்று கூறி அரசின் நிவாரணப் பணிகளுக்கு மறைமுகமாக நற்சான்றிதழ் வழங்கிவிட்டு, பின்னர் சில நாட்கள் கழித்து, "அரசின் சார்பில் **850** கோடி ரூபாய் நிவாரணத்திற்காக முதலமைச்சர் ஒதுக்கியதாக அறிவித்து அனைத்து ஏடுகளும் கொட்டை எழுத்துகளில் வெளியிட்டுவிட்டன. மத்திய அரசிடம் **5,000** கோடி ரூபாய் தமிழகத்தின் சார்பில் நிதி உதவி கேட்டுவிட்டார்கள். இது தான் புயல் மழை நிவாரணப் பணி! இப்படியெல்லாம் அறிவித்துவிட்டால் மட்டுமே அது நிவாரணப் பணி நிறைவேறியதாக ஆகிவிடுமா? சர்க்கரை என்று எழுதிக் காட்டினால் நாவில் இனிப்பு வந்துவிடுமா?" என்று கூறியுள்ளார். எனது அரசு புயல் நிவாரணத்திற்காக பணம் வழங்கியதோடு மட்டுமல்லாமல், நிவாரணப் பணிகளை எவ்வாறு விரைந்து மேற்கொண்டது என்பதையும் இங்கே விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். அதற்காகத்தான் **2000** மற்றும் **2008** ஆம் ஆண்டுகளில் வீசிய புயல்கள் குறித்தும் ஒப்பிட்டுள்ளேன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், **27.11.2008** அன்று ''நிஷா'' புயல் தாக்கத்தின் போது கடலூர் மற்றும் விழுப்பரம் மாவட்டங்களில் மிகவும் கால தாமதமாகவே பயிர் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, **2.3.2009** அன்று தான் பயிர் இழப்பீட்டுத் தொகைக்கான கடைசித் தவணை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. அதாவது மூன்று மாதங்கள் கழித்தே பயிர் இழப்பீட்டுத் தொகை முழுவதுமாக வழங்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இன்னும் மிக கால தாமதமாகத் தான் பயிர் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்திற்கு, பயிர் சேத நிவாரண தொகையான **2** கோடியே **52** லட்சம் ரூபாய் அரசால் **26.2.2010** அன்று, அதாவது **14 மாதங்களுக்குப் பின்னரே** வழங்கப்பட்டது. இதில், **1** கோடியே **40** லட்சம் ரூபாய் **6.8.2010** அன்றும்; **92** லட்சம் ரூபாய் **17.9.2010** அன்றும் தான் மாவட்ட நிர்வாகத்தால் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதனை தெரிந்த மக்கள், எந்த அரசு துன்பப்படும் மக்களுக்காக விரைந்து பணிகளை செய்கிறது என்பதை நன்கு அறிவார்கள்.

இந்த அரசைப் பழிக்கும் உண்மைக்கு மாறான அறிக்கைகள் அரசின் நற்பணிகளை மறைத்துவிடாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் தனது பாடலில் கூறியுள்ளபடி

"பொய்மை எப்போதும் ஓங்குவதும் இல்லை

உண்மை எப்பொழுதும் தூங்குவதும் இல்லை

என் மனதை நான் அறிவேன்

என் உறவை நான் அறிவேன்"

என்பதை இங்கு நினைவூட்ட விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் தமிழகத்தில் நிலவும் மின் நிலைமை குறித்த தங்களது கவலைகளை எடுத்துரைத்தனர். மின்வெட்டு தீர்க்கப்படும் என மக்களுக்கு தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தும், அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டும் வகையில் தங்களது கருத்துகளை தெரிவித்தனர். எனவே, தமிழ்நாட்டின் மின் நிலைமை தொடர்பான விளக்கங்களை அளிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

2006–ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்ற போது, தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத்தான் இருந்தது. பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினையடுத்து, 2007–ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் ஏற்பட்ட மின் பற்றாக்குறை; 2008–ஆம் ஆண்டு மிகவும் அதிகரித்து; நாங்கள் மீண்டும் 2011–ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை அத்தகைய நிலைமை தொடர்ந்து இருந்தது. 2008–ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மின் தேவை 10,909 மெகாவாட் என்று இருந்த போது, நமக்குக் கிடைக்கப்பெற்ற மின்சாரத்தின் அளவு 9,459 மெகாவாட் ஆகும். இந்த 9,459 மெகாவாட் மின்சாரத்தில், வெளிச் சந்தையிலிருந்து பெறப்பட்ட 1,200 மெகாவாட் மின்சாரமும் அடங்கும். அதாவது 1,450 மெகாவாட் என்ற அளவில் மின் பற்றாக்குறை இருந்தது.

இதனையடுத்து, 1.11.2008 முதல் மிக அதிகமான மின் கட்டுப்பாட்டு முறைகளை, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு கொண்டு வந்தது. இதன்படி, உயர் அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்களுக்கு 40 விழுக்காடு மின்வெட்டும்; குறைவழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்களுக்கு 20 விழுக்காடு மின்வெட்டும்; சென்னை பெருநகரில் 1½ மணி நேர மின்வெட்டும்; மாநிலத்தின் பிற பகுதிகளில் 2 மணி நேர மின்வெட்டும்; மின்சாரம் அதிகமாக பயன்படுத்தும் தருணங்களில் சென்னையை தவிர்த்து பிற இடங்களில் 1 மணி நேர மின் வெட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இது தவிர அறிவிக்கப்படாத மின்வெட்டும் பல மணி நேரம் இருந்தது. மேலும், விவசாய பயனீட்டாளர்களுக்கு 10 மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் செய்யப்படும் என்ற கட்டுப்பாட்டையும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு விதித்தது. இது மட்டுமல்லாமல், உயர் அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலான காலத்திற்கு 5 விழுக்காட்டிற்குள் மின்சாரம் பயன்படுத்த வேண்டும் என்ற கட்டுப்பாடும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் விதிக்கப்பட்டது. பின்னர் இந்தக் கட்டுப்பாடுகள் சிறிதளவு தளர்வு செய்யப்பட்டன.

எனது தலைமையிலான அரசு பதவியேற்ற உடன், பழுதடைந்த நிலையில் இருந்த மின் நிலையங்களை உடனடியாக சரி செய்ய போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஜனவரி 2010 முதல் பழுதடைந்த நிலையில் இருந்த வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம், கடந்த ஜூன் மாதம் எனது அரசால் இயக்கி வைக்கப்பட்டது. இதே போன்று, பழுதடைந்திருந்த குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையம், கடந்த ஜூன் மாதம் இந்த அரசால் சரி செய்யப்பட்டது. இது தவிர, எனது அரசின் திறமையான நிர்வாக நடவடிக்கை காரணமாக, தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டது.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கூடுதலாக நிறுவப்பட்ட மின் நிறுவு திறன் வெறும் 206 மெகாவாட் மட்டுமே. ஆனால் 2001 முதல் 2006 வரையிலான எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், **2518** மெகாவாட் மின் நிறுவு திறன் கூடுதலாக நிறுவப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சியில் கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தாமல் இருந்தது தான், இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கும் மின் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமாகும். ஆனால், இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களோ தங்கள் ஆட்சிக் காலத்தில் பல புதிய மின் திட்டங்கள் தீட்டப்பட்டதாக தெரிவித்தார்கள்.

மின் திட்டங்கள் தீட்டப்படுவது ஒரு புறம் இருக்கட்டும். எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை, கடந்த ஐந்து ஆண்டுகளில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செயல்படுத்தியிருந்தாலே தமிழகம் மின் பற்றாக்குறையை சந்தித்து இருக்காது.

உதாரணமாக, வட சென்னை அருகில், வல்லூரில் 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.7.2002 அன்று எனது முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. தூத்துக்குடியில் 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி

நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ, **19.6.2003** அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டங்களுக்குத் தேவையான நிலங்கள் ஒதுக்கீடு பெறவும்; அனுமதிகளை பெற ஆய்வுகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வட சென்னை அனல் மின் நிலையத்தில், **500** மெகாவாட் அனல் மின் நிலையத்தை நிறுவ **12.12.2005**–அன்று அரசு ஒப்புதல் வழங்கப்பட்டது. **500** மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைத்திடுவதற்கான கருத்துருவும் அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு, முதற்கட்ட பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் **8.9.2005** அன்று துவக்கியது. **இவை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருந்தாலே 3,000 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக கிடைத்திருக்கும்.**

புதிய மின் திட்டங்களை தங்களது ஆட்சிக் காலத்தில் துவக்கியதாக தி.மு.க. உறுப்பினர்கள் கூறியுள்ளார்கள். கடலூர் பவர் கம்பெனி என்னும் நிறுவனத்திற்கு **1,320** மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க அனுமதி அளித்து; அதிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த நிறுவனத்துடன் **28.9.2006** அன்று ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. ஆனால் தி.மு.க. ஆட்சி முடியும் வரை இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இது தான் மின் உற்பத்தியில் முந்தைய தி.மு.க. அரசு செலுத்திய அக்கறை.

தற்போது எனது அரசு பதவியேற்ற பின், தமிழக மின் நிலைமையை சீர் செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். தற்போது பணிகள் நடைபெற்று வரும் மின் திட்டங்களை துரிதமாக நிறைவேற்ற எனது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**600** மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை விரிவாக்க மின் திட்டம் யூனிட்–**1** விரைவில் பலனுக்கு வரும் வகையில் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், எதிர்பாராத விதமாக ஹரித்வாரில் உள்ள பாரத் மிகு மின் நிறுவனத்திலிருந்து மின்னாக்கி ஸ்டேட்டர், அதாவது Generator Stator, எடுத்து வரும் வழியில் மத்தியப் பிரதேசத்தில் பாலம் இடிந்து Stator ஆற்றில் விழுந்துவிட்டது. இதன் விளைவாக, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் 7 மாத காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதம் செயல்பாட்டிற்கு வரும்.

**500** மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் கூட்டு முயற்சி மின் திட்டம்–I, தேசிய அனல் மின் கழகம் (NTPC) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் **(TNEB)** ஆகிய நிறுவனங்கள் இணைந்து செயல்படுத்தும் திட்டம் ஆகும். இதன் மூலம், தமிழகத்திற்கு **375** மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். இந்தத் திட்டம் **2010**–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சரியாக கண்காணிக்கத் தவறியதால் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது, எங்களது அரசு பொறுப்பேற்றவுடன், இந்தத் திட்டத்தின் நிறுவுப் பணிகளை தீவிரமாக கண்காணித்து வந்ததன் பயனாக, இந்த ஆண்டு மார்ச் மாதம் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரவுள்ளது.

இதே போன்று தேசிய அனல் மின் கழகம் (NTPC) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் **(TNEB)** ஆகிய நிறுவனங்கள் இணைந்து செயல்படுத்தும் **500** மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் கூட்டு முயற்சி மின் திட்டம்–II, **2011** ஆம் ஆண்டு மார்ச் மாதமே செயல்பாட்டிற்கு வந்திருக்க வேண்டும். ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் அக்கறையின்மை காரணமாக, குறித்த காலத்தில் இந்தத் திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. அந்தப் பணிகளையும், தற்போது நாங்கள் துரிதப்படுத்தி வருகிறோம். இந்த யூனிட் – II, இந்த ஆண்டு ஜூன் மாதம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும், **500** மொகாவாட் மின் திறன் கொண்ட மூன்றாவது யூனிட், அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

600 மொகாவாட் மின் திறன் கொண்ட, மேட்டூர் அனல் மின் நிலையத்தின் மூன்றாவது நிலை கடந்த செப்டம்பர் மாதமே செயல்பாட்டிற்கு வந்திருக்க வேண்டும். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்திற்கான பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்றதால், குறிப்பிட்ட காலத்திற்குள், இந்தத் திட்டத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வர முடியவில்லை. நாங்கள் எடுத்து வரும் துரித நடவடிக்கை காரணமாக, இந்தத் திட்டம் இந்த ஆண்டு மார்ச் மாதம் செயல்பாட்டிற்கு வரும்.

600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் நிலையத்தின் திட்டம் யூனிட் – II, இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் செயல்பாட்டிற்கு வரும்.

அதாவது, **இந்த ஆண்டு ஜுன் மாதத்தில் 1950 மெகாவாட் மின்சாரமும்; அக்டோபர் மாதத்தில் மேலும் 600 மெகாவாட் மின்சாரமும் கூடுதலாக கிடைப்பதற்கு வழிவகை செய்துள்ளோம்.**

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, அனல் மின் நிலையங்கள் **முறையாக** பராமரிக்கப்பட்டு, **சிறப்பாக** கண்காணிக்கப்படுவதால் அவை மீண்டும் **திறம்பட** செயல்படத் துவங்கியுள்ளன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் கடந்த ஆண்டு உற்பத்தித் திறன் 82.05 விழுக்காடு தான். தற்போது இதன் உற்பத்தித் திறன் **90.36 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டுள்ளது**. இதே போன்று, மேட்டூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 86.88 விழுக்காட்டிலிருந்து **93.19 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டுள்ளது.**

இதே போன்று, வடசென்னை அனல் மின் நிலைய உற்பத்தித் திறனும் 81.41 விழுக்காட்டிலிருந்து **92.43 விழுக்காடாக** அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறந்த நிர்வாக நடவடிக்கைகளினால் உற்பத்தித் திறன் இவ்வாறு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, இந்த மூன்று அனல் மின் நிலையங்களிலிருந்தும் **1836 மில்லியன் யூனிட்டுகள்** அளவுக்கு மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 642 கோடி ரூபாய் **சேமிப்பு** ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர, வெளிச் சந்தைகளிலிருந்து குறைந்த விலைக்கு மின்சாரம் பெறப்படுவதன் மூலம் **1020 கோடி ரூபாய்** தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு **சேமிப்பு** ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழகத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களில் பணிகளை **விரைந்து** முடிப்பதற்கான நடவடிக்கைகள் **துரிதமாக** மேற்கொள்ளப்பட்டு வந்தாலும்; தற்போதுள்ள மின் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு, வெளிச் சந்தையிலிருந்து தேவையான மின்சாரத்தை கொள்முதல் செய்யலாமே என்ற வினா பலர் மனதிலும் எழக்கூடும்.

வெளிச் சந்தைகளிலிருந்து போதிய மின்சாரத்தைப் பெறுவதில் பல்வேறு தடைகள் உள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தற்போதைய ஒட்டுமொத்த கடன் சுமை 50,000 கோடி ரூபாய்க்கு மேல் உள்ளது. மின்சாரம் விற்பனை செய்தவர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை 11,500 கோடி ரூபாய் ஆகும். கடந்த சில ஆண்டுகளாக மின்சார வாரியம் புதியதாக கடனைப் பெற்று, அதிலிருந்து பழைய கடனுக்கான தவணைத் தொகையையும், வட்டியையும் செலுத்தி வருகிறது. 2010–2011 ஆம் ஆண்டு 21,385 கோடியே 70 லட்சம் ரூபாய் கடன் பெற்று, 15,000 கோடி ரூபாய்க்கு மேல் கடனுக்கான தவணைத் தொகையையும், வட்டியையும் செலுத்தியுள்ளது. இவ்வாறான கடன் சுமையில் மின்சார வாரியம் உள்ளதாலும்; மின்சாரம் விற்பனை செய்தவர்களுக்கு பணம் வழங்காததாலும்; தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்சாரம் வழங்க மின் உற்பத்தியாளர்களும், மின் வணிகர்களும் தயக்கம் காட்டுகின்றனர். இதன் காரணமாக, மின் உற்பத்தியாளர்கள் அதிக விலை கோருகின்றனர். இது மட்டுமல்லாமல், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது மின்வெட்டு நடைமுறையில் உள்ளது. உதாரணமாக, ஐதராபாத் நகரில் 3 மணி நேர மின் வெட்டும், ஆந்திர பிரதேசத்தின் பிற பகுதிகளில் 7 மணி நேர மின்வெட்டும்;

கர்நாடக மாநிலத்தின் நகர்ப் பகுதிகளில் 2 மணி நேர மின்வெட்டும், ஊரகப் பகுதிகளில் 6 மணி நேர மின்வெட்டும் நடைமுறையில் உள்ளன. மின் உற்பத்தியாளர்கள் மின்சாரத்திற்கான விலையை உயர்த்துவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையிலும் வெளிச் சந்தையிலிருந்து அதிக விலை கொடுத்தாவது மின்சாரம் வாங்கி மின்வெட்டை நீக்கலாம் என்றாலும்; அந்த மின்சாரத்தை தமிழகத்திற்கு கொண்டு வருவதற்கு வழிவகை இல்லாத சூழ்நிலை உள்ளது. இந்தியாவின் தென் பிராந்தியத்திற்கும், நாட்டின் இதர பிராந்தியங்களுக்கும் இடையே ஒருங்கிணைந்த மின் கட்டமைப்பு வசதிகள் இல்லை. தென் பிராந்தியங்களுக்குத் தேவையான மின் தொடரை மத்திய அரசு உருவாக்கவில்லை. எனவே மின் கடத்தும் மின் தொடர் அமைப்பில், அதாவது, Transmission Corridor-ல் மின் தொடர் நெருக்கடி உள்ளதன் காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து தேவையான மின்சாரம் பெற இயலவில்லை. உதாரணமாக, குஜராத் மாநிலத்திலிருந்து யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாய் 20 காசு என்ற விலையில் 500 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்கான ஒரு ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளது. ஆனாலும், மின் தொடர் நெருக்கடி காரணமாக, தற்போது 235 மெகாவாட் அளவிற்கே மின்சாரம் பெற இயலுகிறது.

வெளிச் சந்தைகளிலிருந்து மின்சாரம் பெறுவதில் மிகுந்த இடர்பாடுகள் உள்ள சூழ்நிலையில், நமது மாநிலத்தில் துவக்கப்பட்டுள்ள மின் திட்டங்களை விரைந்து செயலாக்கத்திற்கு கொண்டு வருவது தான் மின் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதால் தான், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நடப்பு நிதியாண்டில் 6,455 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகத்தான், நான் ஏற்கெனவே தெரிவித்தபடி இந்த ஜுன் மாதத்திலேயே 1,950 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் கிடைக்கப் பெறும்.

நான் இதுவரை விரிவாக எடுத்துக் கூறிய காரணங்களால் தான் மின் பற்றாக்குறையை இன்னமும் சீராக்க இயலவில்லை. இந்த மின் பற்றாக்குறை நடப்பாண்டு ஜுன் மாதம் முதல் படிப்படியாக குறைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு, அதாவது 2013 மத்தியில், மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்து ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் சிலர் கூறினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் பகுதியில் உள்ள மக்களின் அச்சத்தை தீர்க்கும் வகையில், மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழுவின் இறுதிக் கூட்டம் 31.1.2012 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில்; கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக ஆளுநர் உரையில் எதையும் தெரிவிப்பது சரியாக அமையாது என்ற காரணத்தால் தான், ஆளுநர் உரையில் இது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அணுமின் நிலையங்கள் அமைப்பதற்கு 1988 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் சோவியத் ரஷ்யா இடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது என்பதையும்; 2001 ஆம் ஆண்டு இந்திய அணுமின் கழகத்தால், அதாவது Nuclear Power Corporation of India Ltd. என்ற நிறுவனத்தால், பணிகள் துவக்கப்பட்டு; 95 விழுக்காடு பணிகள் முடிவடைந்த நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் முதல் அந்தப் பகுதி மக்கள் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த அச்சம் காரணமாக போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய எந்த ஒரு திட்ட செயல்பாட்டினையும் எனது அரசு ஊக்குவிக்காது என்பதால், இந்த அணுமின் நிலையத்தால் பாதிப்பு ஏற்படும் என்ற அந்தப்

பகுதி மக்களின் அச்சத்தை நீக்கிய பின்னரே, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்றும்; அதுவரை இந்தத் திட்டத்தின் பணிகளை நிறுத்தி வைக்குமாறும் நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டதுடன், தமிழக அமைச்சரவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் அடிப்படையில், மத்திய அரசு கூடங்குளம் மக்களின் அச்சத்தை போக்குவதற்காக, 15 பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்த, கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்புக் குழு சார்பாக மூன்று பேர் நியமிக்கப்பட்டனர். மாநில அரசின் சார்பாக, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும்; திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் அந்தக் குழுவில் இடம் பெற்றனர். இந்தக் குழுவின் கூட்டம் 8.11.2011, 18.11.2011, 15.12.2011 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில், மைய அரசால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் அணுமின் நிலைய எதிர்ப்புக் குழுவினரால் பல்வேறு வினாக்கள் எழுப்பப்பட்டன. அவர்களால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கான பதில் அறிக்கையை வல்லுநர் குழு அளித்ததோடு மட்டுமல்லாமல், கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பானது தான் என்பது குறித்த 77 பக்க அறிக்கையையும் அளித்தது.

இந்த நிலையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் இறுதிக் கூட்டம் 31.1.2012 அன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அணுமின் நிலைய எதிர்ப்புக் குழுவின் சார்பாக, மூன்று பிரதிநிதிகளில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டுள்ளார். மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, மேலும் ஒரு அறிக்கையை அளித்ததுடன், இந்தக் குழுவின் பணி முடிவுற்றதாக அறிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், கூடங்குளம் அணுமின் நிலைய பாதுகாப்பு குறித்தும்; அப்பகுதி மக்களிடையே இது குறித்து தற்போது நிலவி வரும் எண்ணங்கள் மற்றும் அச்ச உணர்வுகள் குறித்தும் அறிந்து; மாநில அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாநில அரசால் ஒரு வல்லுநர் குழு உடனடியாக நியமிக்கப்படும். இந்தக் குழு தனது அறிக்கையை அரசுக்கு விரைந்து அளிக்கும். இந்த வல்லுநர் குழு அறிக்கையின் அடிப்படையில், மாநில அரசு மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மக்கள் இந்த அரசு மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு பாத்திரமாக, மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை இந்த அரசு தொய்வின்றி ஆற்றும்; மக்கள் நலத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு; மக்கள் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் இந்த அரசுக்கு இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

என்னுடைய இந்தப் பதிலுரையின் மூலம், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு பதில் கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். எனது விளக்கங்களை, இந்தப் பதிலுரையை ஏற்றுக் கொண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுத்துள்ள திருத்தங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி வணக்கம்.

*******